முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி வைகாசி மாதம் 12ம் திகதி முதல் வைகாசி மாதம் 19ம் திகதி வரை மே 26ம் திகதி முதல் ஜுன் 02ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தரும சக்கர தலைமை பூமியே**
**தயவில் மிகுந்த செந்தமிழகமே**
**பெருமை மிகுந்த ஆளுமை கொண்ட**
**புண்ணியம் செறிந்த பாரதமே**

**2.** **பாரதம் தமிழகம் தன்னில்**
**பகருவேன் விகாரி விடை திங்களில்**
**கூறவே விய திகதி மேல் மூவாறோர் திகதி வரை**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 12ம் நாள் 26.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முடிய)**
**குறிப்பாக நடக்கும் நிகழ்வாக எதிர்கால பலனை**

**3.** **பலனை வார ஆசியாக அரங்கன் கேட்க**
**பகருவேன் சுப்பிரமணியர் யானும்**
**கழனி பூமி காக்கின்ற அரசே**
**கலியுகத்தில் தன் பலம் கூடி நிற்கும்**

**4.** **நிற்கவே நீர்நில வளம் காக்கா**
**நிர்வாகம் செய்கின்ற அரசாங்கம்**
**ஏற்பின்றி மக்களால் கைவிடப்படும்**
**இனியும் அரசியல் கட்சிகள்**

**5.** **கட்சிகள் கவர்ச்சியான வாக்குறுதி**
**கையூட்டு சூதக வழிமுறைகளை**
**ஆட்படுத்தினால் மக்கள் சபையில்**
**ஆதரவின்றி பின்னடைவு காணும்**

**6.** **காணவே மக்கள் சேவைக்கு**
**கட்சி சமூக இன பேதமின்றி**
**ஞானவழி உண்மைபட சேவை**
**நம்பகம்பட ஆற்றும் தலைமையே**

7. தலைமையே தனித்துவம் பெறும்
தன் ஆளுமையில் சிறக்கும்
ஊழல் துறை வழி கண்டவர்களும்
உண்மை நிலைக்கு வரவே பாதுகாப்பு உண்டாகும்

8. ஆகவே அக்கினி இனி தணிந்து
ஆற்றலாக மழை வளம் கூடும்
வகைபட தலைமை மாந்தர்களும்
வள்ளல் நெறிக்கு வர நேரும்

9. நேருமையாளர்களை நோக்கி
நேசக்கரம் நீட்டி அருளுகின்ற
ஆறுமுக அரங்கமகா ஞானியரின்
ஆன்மீக ஞான சபைக்கு வர

10. வருகவே தலைமை மாந்தர்கட்கு
வல்லமையான ஞான ஆட்சி தரும்
ஆறுமுகன் என் அருளும் தயவும் கிட்டும்
அறிவித்த வார ஆசி முற்றே.

—சுபம்—

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் வைகாசி மாதம் 12ம் நாள் 26.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தருமத்தினை உலகினில் நிலைநாட்டுவதில் தலைமையாக விளங்குகின்ற தர்மத்தின் தலைமை தேசமே தயவில் சிறந்து விளங்குகின்ற தமிழகமே பெருமைமிக்கவர்களால் ஞானவான்களால் ஆட்சி செய்யப்பட்ட புண்ணியம் மிகுந்த பாரததேசமே பாரததேசத்திலும் தமிழகத்திலும் விகாரி வருடம் வைகாசி மாதம் 12ம் நாள் 26.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

எந்த அரசு விவசாய பெருங்குடி மக்களையும் விவசாயத்தையும் போற்றி பாதுகாக்கின்றதோ, அந்த அரசாங்கமே பலம் பெருகி நல்லரசாக அமையும். அதைவிடுத்து நீர்நில வளங்களை காக்காமல் விவசாய மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் செயல்படுகின்ற அரசாங்கம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் கைவிடப்படும்.

மக்களுக்கு தொண்டு மனப்பான்மையுடன் நடந்து தொண்டுகள் செய்யாமல் அரசியல் கட்சிகள் இனியும் மக்களை ஏமாற்றும் வகையில் பொய்யான வாக்குறுதிகளை தருவதும், மக்களுக்கு கவர்ச்சியான போலி திட்டங்களை அறிவிப்பதும், கையூட்டாக லஞ்சம் தந்து கவர நினைப்பதும் மற்றும் இலவசம் என்ற பெயரில் ஏமாற்றுவதும் மக்களை சூதக வழிமுறைகள் என்கிற சந்தர்ப்பவாத மறைமுக சூழ்ச்சி வழிமுறைகளை கையாண்டு மக்களை ஏமாற்றினால் அந்த அரசியல் கட்சிகள் எல்லாம் மக்கள் சபையில் ஆதரவு இழந்து பின்னடைவைச் சந்திக்கும்.

ஆதலினால் மக்களை ஆள நினைக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் மக்கள் சேவைக்கு வந்திட வேண்டும். கட்சி, சமூக, இன, பேதம் இல்லாமல் ஞானவழியில் தர்மத்தின் வழியில் மக்களின் நம்பிக்கையை பெற்றிட்ட உண்மையான வழியில் மக்களுக்கு சேவைகள் செய்யும் கட்சிகளே இனி நாட்டினில் தனித்துவம் மிக்க கட்சியாக மக்களிடம் வரவேற்பை பெறும். அக்கட்சியே ஆட்சி பொறுப்பினை ஏற்று சிறப்பான ஆட்சியை மக்களுக்கு தந்திடும்.

இதுவரை ஊழல் புரிந்திட்டாலும் இனியேனும் திருந்தி மக்கள் குரலிற்கும் மக்களுக்கும் மதிப்பளித்து உண்மை வழியில் நடந்தால் அவர்கள் மக்களின் ஆதரவைப் பெற்று பாதுகாப்பை பெறுவார்கள்.

இனி வருங்காலம் நாட்டை வாட்டிய வெப்பம் தணிந்து மழை வளம் பெருக ஆரம்பிக்கும். நாட்டின் ஆட்சியில் உள்ளோரும் தலைமை பொறுப்பில் உள்ளோர்களும் இனி வள்ளல் நெறிக்கு வந்திடும் சூழ்நிலைகள் உருவாகும்.

நேர்மையும், உண்மையும்மிக்க மனிதர்களுக்கு நேசக்கரம் நீட்டி அருள் செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆன்மீக ஞானசபைக்கு ஆட்சி செய்வோரும், பொறுப்புகளில் உள்ளோரும் வந்து ஆசி பெற்றிட, தலைமை பொறுப்பில் உள்ள மக்களுக்கு ஞானஆட்சி தருகின்ற முருகப்பெருமான் எமது அருள் கிடைக்கும், எமது தயவும் கிடைக்கும் எனக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–